
# கணபதி தேசிய உயர்தர ஆரம்பப் பள்ளி,

சைதாப்பேட்டை.

ஸ்தாபிதம் 1929.




CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956
MADRAS

## வெள்ளி விழா மலர்.

ஜய ஆண்டு (9-5-1954)

மில் ஜவுளிகளும்

சில்க் ஜவுளிகளும்

கைத்தறி ஜவுளிகளும்

புதுமையான ரகங்களில்

அதிகமான ஜவுளிகள்

குறைந்த விலையில்

கிடைக்குமிடம்:—

கணேஷ் சில்க் எம்போரியம்,

13, பஜார் ரோடு,

சைதாப்பேட்டை.

# பள்ளிப்பாட்டு.

ஸ்ரீ கணபதி நேஷனல் பள்ளி —
சீர்பெறுகவே ஜெய ஜெய ஜெயஜே (ஸ்ரீ)

உத்தம குணமும் உயர்வும் பெற்ற
சத்திய சந்தராம் இரத்தினம் பிள்ளையின் (ஸ்ரீ)

க்ஷேமநாடு முருகேச—நாமம் கொண்ட மானேஜர்க்கீழ்
நேமமாக நேர்மை பெறவே—இராகவனர் தலைமையில்வளர்
பாரத பூமியில் பேரும் புகழும் (ஸ்ரீ)

சிறந்த அறிவும் சீரும் பெறவே
பால ரெங்கன் வாழ்த்துக் கிரங்கி
வரமருள் விநாயக ஜெய. (ஸ்ரீ)



Founder-Manager,

G. RATNAM PILLAI, B A., L.T.,

# வித்திட்ட வித்தகர்

இன்றைய பொழுதிலே வெள்ளிவிழா கண்டு வீறுண்ட பள்ளிக்கு, அன்று வித்திட்ட வித்தகர் கண. இரத்தினப்பிள்ளை. B. A. L. T., அவர்கள் தோன்றிய காலம் நாட்டிலே உரிமை உணர்வு ஊற்றெடுக்கத் தொடங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும். பிறப்பிடம் தஞ்சை ஜில்லா, மாயூரம், பட்டணத்துக்கு வடமேற்கே ஐந்துகல் தொலைவிலுள்ள அதிமான புருடன் என்ற சிற்றூர். தந்தையார் காராளக்குலக் கணபதிப்பிள்ளை. தாயார் வேலங்குடி அமிர்தத்தம்மாள். உடன் பிறந்தார்களில் சோதரர் இருவர்; சோதரிகளில் மூவர். இரத்தினனார் இளமையிலேயே தாய், தந்தையரையும் ஒரு சோதரரையும், இரு சோதரியரையும் இழந்தவரெனினும், குடந்தை நகரச்சபையின் முன்னாள் தலைவரும், வழக்கறிஞரும், தமிழும், தமிழர் பண்பாடும் செறிந்த செம்மலும், தமது அருமை அம்மானுமான வேலங்குடி வீ. துரைசாமிப் பிள்ளையின் ஆழ்ந்த அறிவன்பு நிழலிலே கல்வி பயின்று, அப்பால் தமது அன்புடைத்தமக்கை வேலங்குடி வாழ்வு மேவிய பார்ப்பு அம்மையின் உள்ளம் நிறைந்த உதவியால், கல்லூரிக் கல்வியும் பயின்று பட்டம் பெற்றார்.

B. A. பட்டம் பெற்றதற்கப்பால் பெருந்தோட்டம் கண்ணம்மாள் (திருக்கடையூர் வாழும் க. கைலாசம் பிள்ளையவர்களின் உடன் பிறப்பினரில் ஒருவர்) என்னும் பேரெழில் பெண்மணியை மணந்து மனையறம் புகுந்தார். அக்காலைச் சீர்காழிச் சபாநாயக முதலியார் உயர்நிலைப் பள்ளியிலே ஆசிரியத்தொழிலேற்றார். அங்கே, பள்ளித்தலைமை P. A. சுப்பிரமணிய அய்யர் B. A., L. T. (பின்னர் சென்னைத் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியின் தலைமையாகப் பல ஆண்டுகளாய்ப் பணி புரிந்தவர்) அவர்களின் தோழமை பெற்றுத், தொழில் நுட்பம் கண்டார். அடுத்த ஆண்டிலே இந்தச் சைதை ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி முடித்து, விவசாயத் துணைத்தொழிற் பயிற்சியிலே முதல்தரத்தேர்வு கொண்டு, L. T. பட்டமும் பெற்றார்.

உள்ளப்போக்கு உந்தித்தள்ள, உயர்தர ஆசிரியராய் மலர்ந்த இரத்தினனார் முதலில் கோவை ஜில்லா தாராபுரம் உயர்நிலைப்பள்ளியில் உதவி ஆசிரியப் பதவியில் அமர்ந்துத், தாம் கற்பித்த பல பாடங்களிலே பூகோளம், சரித்திரம், ஆங்கிலம், தமிழ் என்ற பாடங்களில் தனித்திறம் காட்டிக்

கற்பித்து வந்ததைப் பள்ளியாட்சியினரும், அரசியல் சோதனையாளரும் பாராட்டினர். இந்நிலையினை யுணர்ந்த அம்மான் துரைசாமிப்பிள்ளை, தான் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த குடந்தை வாணாதுறை நடுநிலைப்பள்ளிக்குத் தலைமையாக்கினார். ஈண்டுத்தலைமைப்பதவி தாங்கிய இரத்தினனார், ஆசிரியப் பணியில் மேலுஞ் சிறந்து, தலைமைப் பொறுப்புகளின் நுட்பங்களைக் கூர்ந்தறிந்து, பள்ளியின் பலதுறைப்பணி வகைகளிலும் உலவா ஊக்கங் காட்டி வந்தார். இரத்தினனாரின் வளருந் திறமை வளங்கண்ட சென்னை சும்மா இருக்குமா? ஆங்கிலருக்குத் தமிழ் கற்பிக்கும் பண்பிலே தலை சிறந்து விளங்கிய கங்காதரம்பிள்ளையைத் தூதனுப்பியது. அவருடைய நன் முயற்சியால் நமது வித்தகர் வாணாதுறைப் பள்ளியை விட்டுச் சென்னை புரோகிராஸ்ஸிவ் யூனியன் நடுத்தரப்பள்ளியின் தலைமையானார். ஆட்சியாளரான அண்ணாமலை முதலியாரும் சுப்பராய முதலியாரும், பேட்டைப் பெருமக்களும், அரசியல் கல்விததுறையினரும், அகமகிழ்ந்து ஆதரவளித்தனர்.

அன்பு நிறை மனைவியாருடனும் இரண்டு பெண் மகவுகளுடனும் பிள்ளையவர்கள் சென்னை வாழ்க்கை தொடங்கிய சில காலத்திலேயே 'துன்பமிலா இன்ப வாழ்க்கையுமுண்டோ' என்ற உண்மையை உணர வாய்ப்பு வந்தது. ஈராண்டுகளாய் நோயுடன் மல்லாடிய கண்ணம்மாள் அம்மையார் இறுதியில் தோல்வி காண உலக வாழ்வை நீத்தார். அம்மட்டோ? தாய்பிரியாச் சேயான செவ்வானச் சூரியன்போன்ற தம் இளைய மகளையும் இரண்டு நாட்களிலே ஆவி யுலகினுக்கு அழைத்துக் கொண்டார். தனி மகளுடன், தனி வாழ்விலே இருந்த பிள்ளை யவர்கள், சில மாதங்களிலே எங்கள் குலக்கொடி தளிர்த்த விசாலாட்சி என்ற பட்டம்மையை மணஞ் செய்துகொண்டார். இவ்வம்மையிடம் தோன்றிய இரு பிள்ளைகளுடனும், இரு பெண்களுடனும், மூதத பெண்ணுடனும் குடும்பம் தழைத்துக் களித்திருந்த காலத்திலே, கண்ணம்மாள அம்மையின் எஞ்சி நின்ற ஒரு மகளும் காலன் கொடுமைக்காளானாள். இளைய மனைவியாரின் மூத்த பிள்ளையே இப்பொழுது பள்ளியின் நிர்வாகியான செல்வன் G. R. முருகேசன்; மூதத மகள் செல்வி ஜீவா விஸ்வநாதம் உயர் கல்வி பயின்று B. A. பட்டம் பெற்று லால்குடியில் வாழ்க்கை புகுந்து அவ்வூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் ஆட்சிப்பொறுப்பில் பங்கு கொண்டுள்ளார். பிள்ளையவர்கள் இளைஞர் நலனில் நாட்டங் கொண்டவர்கள். அவர்களுடைய குடந்தை வாழ்க்கையிலும், சென்னை வாழ்க்கையிலும், அவர்களை அண்டி உடன் வாழ்ந்து, கல்வி பயின்று, வாழ்க்கைக்கு வழி வகை செய்துகொண்டு அவர்களைத் தமது தாயாராய், தந்தையாராய், ஆசிரியாராய், இன்றும் போற்றி நிற்போர் பலர்.

புரொக்கிரஸ்ஸிவ் யூனியன் பள்ளியில் தலைமையாக இருந்த காலத்திலே அப்பொழுது மாணவர் மேம்பாட்டுக் குற்றவை என்று கல்வியாளர் போற்றிய சாரண இயக்கத்திலும், கைத்தொழிற் பயிற்சியிலும் பிள்ளை அவர்கள் பேரூக்கங்கொண்டு அப்புதிய முறைகளைத் தமது மாணவர்கட்கு உரிமையாக்கி, அவர்களுடைய உள்ளம் நிலைத்த அன்பினைப் பெற்றார்கள். அவர்களுடைய ஆழ்ந்த அநுபவங்களையும், செயலாற்றும் சீரிய முறைகளையும் அண்மையில் இருந்து அறிந்த பச்சையப்ப வள்ளல் அறநிலைய ஆட்சியாளர், பிள்ளையவர்களைத் தமது கோவிந்தப்ப நாயக்கர் நடுநிலைப் பள்ளிக்குத் தலைமையாக அழைத்துக்கொண்டனர். எங்கும்போல், அங்கும் இதயம் இவர்ந்த பணி புரிந்து, அவர்கள் ஆசிரியர், மாணவர், பொதுமக்கள் ஆகியோரின் பாராட்டைப் பெற்றார்கள். மாணவர்கட்குதவும் பாட நூல்களைத் தாய்மொழியில் முறைப்பட ஆக்கி வெளியிட்ட பெருமையும் எழுந்தது. ஆயினும் சில ஆண்டுகளுக்கப்பால் வயது முதிர்வுக்கும், அறிவு முதிர்வுக்கும் ஒப்ப, பிறர் அமைப்புகளில் பணியாற்ற மனம் இன்றி, முழுச் சுய உரிமையுடன் பணிபுரிவதில் மனம் ஒன்றியவராய்ப் பிள்ளையவர்கள் அவ்வறநிலைப் பள்ளியை விட்டு, இச்சைதையிலே இப்பள்ளியை 1929-ல் தோற்றுவித்தார்கள். தோன்றிய பள்ளி தமது தந்தையாரின் நினைவுச் சின்னமாய் நிலைக்கவேண்டு மென்று உறுதி கொண்டவராய், அதற்குக் ''கணபதி தேசியப் பள்ளி'' என்று பெயர் சூட்டினார். மகன் தந்தைக் காற்றிய பரிவுப் பணியைப் பாருங்கள்! முளைத்த பள்ளிக்கு முட்டுகள் பல முன்வந்தன. அம் முட்டுகளைப் பிள்ளையவர்கள் தட்டித் தள்ளிப், பள்ளி நிலைகொள்ளச் செய்தார்கள். மெய் முயற்சி வெற்றியே தந்தது. அவ்வெற்றியின் விளைவிலே திளைக்கின்றனர் இங்குள்ள மாணவ மாணவிகள்!

பிள்ளையவர்களின் இரண்டாம் மனைவியார் விசாலாட்சியம்மை தன் இரண்டாம் பிள்ளையை ஈன்ற சில மாதங்களிலே மெலிவுற்று இறையடி சேர்ந்தார். இது தான் தாரமொன்றைப் பேரிடி! இள மக்களுடன் தனித்து விடப்பட்ட பிள்ளையவர்கள் வருந்தி, வாடி, வேறு வகையறியாமல், மக்களின் ஆதரவுக்கென முன்னிரு மனைவியர் பிறந்த பெருந்தோட்டத்திலேயே இரத்தினம்மாள் என்ற பெண்மணியை மணந்து குடும்ப வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொண்டார். ஆனல், சலியா உழைப்பிலே பல ஆண்டுகள் ஒன்றி நின்ற உடல் திறங்கெட்டு வந்தது. அப்பொழுதும் மனந் தளராமல் இப்பள்ளியின் ஆக்கத்திலே ஊக்கங்காட்டி வந்தார்கள். உள்ளம் உறுதி விடாதிருந்தும் உடல்கட்டு விட்டது. 1931-ஆம் ஆண்டிலே ஒருநாள் மாலை பள்ளிப் பணிமுடித்து வீடு திரும்பிய பிள்ளை

யவர்கள் திடீரென்று மறைந்தார்கள். இருநூறு மைல்களுக்கப்பாலிருந்து நான் வந்து சேருமுன் அவர்களுடைய உடலும் மறைந்துவிட்டது. நான் கண்டது வெந்து நொறுங்கிய எலும்புகளே!

மறைந்த பிள்ளையவர்களிடம் உறைந்த அன்பு பூண்டோர் பலர். எனினும் அவர்களிடம் நெருங்கிப் பழகி, வைதிடினும் வாழ்த்திடினும், வைத்த அன்பு மாறாத நேர்மையினர் ஒரு சிலர். அவ்வொரு சிலரில் இன்றும் உலக வாழ்வில் இருந்துவருவோர் சிலரினுஞ் சிலரே. பதினைந்து ஆண்டுகட்குமேல் அவர்களுடன் உள்ளம் ஒன்றி வாழ்ந்த நான் இச்சிலரில் ஒருவனுவேன். அவர்களைக் காணுந்தோறும் "இவர்களைப் போல் நாமும் ஏன் ஆகக்கூடாது?" என்ற உள்ளக் கிளர்ச்சி கொண்ட நான் அவர்கள் அறிவுச் சுவடுகளைப் பின்பற்றினேன். உயர்நிலை ஆசிரியரின் உள்ளப்போக்கை என்பால் பதிக்க உறுதி கொண்ட காரணத்தாலோ என்னவோ நான் அவர்களிடம் தனித்திருக்கும் சமயங்களிலெல்லாம் ஆசிரியத் தொழிலையும், ஆசிரியன் மன நேர்மையையும், தலைமையாசிரியர் பொறுப்புகளையும், தலைமைக்கும் உதவிக்கும் உள்ள உறவுப் பான்மையையும், மாணவர்க்குறு நெறிகளையும், அவர்கள் உள்ளத்தை ஈர்க்கும் நூல்களை ஆக்கும் முறைகளையும், சாரணியத்தின் சிறப்பினையும், உடல் உழைப்பின் மேன்மையையும், எளிய ஆனல் ஆரோக்கியமான வாழ்வின் வகைகளையும், யாவற்றிற்கும் மேலாக் புறப் பொலிவும் அகச் சூனியமுமான போலி வாழ்க்கை விட்டுப், பொழுதெல்லாம் பயன்விளை பணிசெய்து இன்பங்காணும் வள மனப் பண்புகளையும் — இவைகளையெல்லாம் சார்ந்த தன் அனுபவங்களையும் திட்டங்களையும் அவர்கள் விளக்கிவந்தார்கள். அவ்வுரைகளையெல்லாம் நான் "செவி வாயாக, நெஞ்சு களனுகக்" கொண்டதுண்டு, அவைகளை எந்த அளவினுக்கு என் வாழ்க்கையில் — அறிவு வாழ்க்கையில் — ஆசிரிய வாழ்க்கையில் — கல்விச் சமுதாய வாழ்க்கையில், எடுத்தாண்டுள்ளேன் என்பதைக் கூற இயலவில்லை; கூற அஞ்சுகிறேன். அவர்களுடன் நான் கொண்டிருந்த உறவு — உள்ளத்து உறவுடன் உடல் சேர்ந்த உறவும் — உணர்ச்சியையே பெருக்குகின்றது. ஒன்று சொல்வேன்; நான் ஆளானது எனது 'அம்மானின் அன்பினுல்! பிள்ளையவர்கள் எனது அருமை அம்மானே! நான் அவர்கள் சோதரியார் பாப்பு அம்மையாரின் பிள்ளை.

32, மாயூரம் செட்டித்தெரு,
22—4—'54

K. சம்பந்தம் B. A., L. T.,




MANAGER—1932 to 1941.

Sri. M. SOMASUNDARAM, B. A.,



MANAGER

Sri. G. R. MURUGESAN



HEADMASTER.

Sri. S. RAGHAVACHARIAR

# Glimpses of the Founder's Life

(Sri A. Shanmugham, B. A., L. T.)

*Who the Founder is:-*

Ganapathy Ratnam Pillai is a house-hold name in Mayuram Taluk, Tanjore District. Though from his fortieth year onwards, he was a resident of Madras, his sphere of philanthropy and influence was extensive in his native taluk. With a standing of over two decades as teacher and Headmaster of a premier institution attached to the Pachappa's Charities in Madras, he directed his energies to founding a new Elementary School at Saidapet, now in Madras in 1929.

*Need for the School:-*

The object was to cater to the needs of the many children of school-going age in the locality. Most of the children had to cross the Railway line and the ever-busy Mount Road before reaching the Kindergarten Section of the Government Model School. Even there the number of seats was a few and so admissions were restricted to a few. The school founded by the late G Ratnam Pillai he named the 'Ganapathy National School'. Unlike the other schools in the neighbourhood, this institution was not from the very start content with teaching the children merely the three Rs The daily work commenced with a prayer—a devotional song. Religious instruction was given at the end of the school hour In compliance with the wish of the parents a Telugu Pandit was appointed. Furniture, appertenances and appliances were supplied at his own cost.

*Recognition by Government:-*

The Educational Officer of the District soon heard of the good name and good work done by the school. This made him one day step up the school and ask the Founder if Mr. Pillai

would care to have his school recognised by Government. The latter replied simply that he had no objection to such recognition being given to the school-his fond child. Thanks to the efforts of Sri. Elanjiam Mudaliar of Iyanavaram, the President of the District Educational Council, recognition was given to the first five standards.

*The Old Order changeth :-*

Later, the authorities insisted on trained teachers replacing most of the S. S. L. C. untrained members of the staff. This was done, though it entailed the disbanding of a group of devoted teachers who did selfless service for the progress of the school. Their salaries were meagre at the time, but their respect and affection towards Mr. Pillai bordered on veneration.

*Development :-*

One of the Senior Inspectors of the range, a gentleman well-known for his strictness was very favourably impressed with the working of the school and he put his impressions in the Inspection Book The strength of the school improved year by year. More and more girls sought and got admission in all standards Lady teachers were appointed, as they were more fitted by Nature to handle toddlers and children in their teens. In accordance with the desire of the parents, higher standards up to the eighth were opened All of them were temporarily recognised by Government.

*Co operation :-*

The Headmaster of the school was a raw graduate. He had three secondary grade and four Higher grade teachers to assist him in his work. Regular Parents' Days were celebrated so as to bring the parents and the staff in close contact No parent felt himself a stranger or outsider while he was around in the school, because Mr. Pillai talked to him in such a way detailing all he was able to do and hoped to do for the children that he came to appreciate the view-point of the Founder-Manager and

volunteered to help in the matter under discussion. Sris. Chelvaranga Raju, Novelist Raju Sivasailam Pillai S. Murugesa Mudaliar, Abdul Razak, Narasimalu are but the names of a few gentlemen of out-standing merit who took a keen interest in the development of the school along with the Founder. Their frequent visits to the school, their presiding over meetings of the teachers and the taught and their generous donations for prizes at the School Day celebrations were marks of their abiding interest. A colleague of Mr. Pillai, T. Margam Ayyar started a school in the eastern part of the town. Rare indeed was the hearty co-operation and good-will that existed between these Founder Managers who exchanged views as to bettering the accommodation and increasing the quality and quantity of the furniture and paying the staff more for their enthusiastic work.

*An Anecdote :-*

Mr. Ratnam Pillai was always mild with offenders, pupils or his subordinates and reformed them by his gentle and persuasive words. Once when the Inspector of Schools went round the classes of the school of which Mr. Pillai was the Head, he noticed a boy busy cutting with a pen-knife on his desk. He turned the boy over to the Headmaster with a directive to give him suitable punishment for his inattention in class. Later in the day after luncheon, the Inspector remembered the incident and asked the Head what he had done. The latter without a word took the Inspector to the office Room where the offender was busy cutting white writing paper into foolscap size for the ensuing examination. He had done half a ream and was in the middle of the other half, when the Inspector with a smile dismissed him and appreciated the tact of the Headmaster who had put the cutting propensity of the boy to good use. That boy was poor Me!

*Other aspects of his work :-*

Practically every day of his brief span of life was a busy one. He was a Director of the Mylapore Permanent Fund and

of the Triplicane Urban Co-operative Society. As member of the Madras Text Book Committee he was helping various authors to forge ahead. A place on the Film Censor Board was given him. He almost daily contacted Messrs. C. Coomaraswamy Naidu and Sons, a premier publishing firm of the City who claimed him as one of their patrons in those days along with C R Namasivaya Mudaliar and others. The Madras University availed itself of his wide and intensive knowledge of the regional language by having him coopted as member of the Tamil Lexicon Committee. As an author of text-books he was guiding a generation of pupils. On the whole his life was one of activity in the public cause.

*A bolt from the blue :-*

A bolt from the blue came in the sudden demise due to heart-failure of this illustrious and excellent man on 31st December 1931. The masters and pupils in tears paid their last respects to the beneficent scholar and Manager of the school. The Management was taken up as a trust of the minors by their nearest relative Sri. M Somasundaram Pillai, a Government Officer in the Board of Revenue, Excise. He spared neither efforts nor money in keeping the good name of the institution and in making the staff contented. By the end of April in 1932, the District Authority on Education paid a surprise visit to the school. Being pleased and satisfied with the tiptop condition of the school, he paid a tribute to the Founder and forthwith recommended permanent recognition of all standards. This was done in due course.

*An indefatigable worker :-*

A born Teacher, and deeply religious gentleman who from the outset took a parental care and interest in the children entrusted to him was found in the present Headmaster He was given the onerous task of developing the school further. For the past 22 years he has been doing unsparing work in making the school what it is now maintaining its high traditions and growing taller and taller. He may take legitimate

pride in his achievement of moulding the character of hundreds of children of this town for well over two decades. His genial personality and unostentatious work at school have endeared him to one and all among the staff members, past and present and the children whom he fosters and the parents who are content with turning out their wards to him with the assurance that training in complete citizenship is sure to be given them at school.

*A worthy son of a worthy father :-*

About a dozen years ago the Management was taken over by Sri G. R. Murugesan the eldest son of Mr. G. Ratnam Pillai. He too is imbued with the high ideals cherished by his father and is exerting himself to make the school unique of its kind in training all the faculties of scholars entrusted to its care. Though the expenditure goes on mounting and receipts as grant in-aid are not in proportion, he spends every pie he receives on bettering the lot of the Teachers, on equipment and on aids to Teaching.

*Family Environment :-*

The family environment of the Founder Manager of the School was congenial educative and instructive Many a poor boy was taken over as his ward, irrespective of caste or creed, educated, fed and clothed. Suitable employments were found for them and all of them are happy today cherishing the memory of their benefactor His wife, a dignified and pious lady and housewife predeceased him in 1930, leaving behind her four children. One of the daughters is a graduate of the Madras University, a Queen Marian.

*A Need :-*

A pukka building of its own is a long felt want for the school. For a long time now it has been growing and getting cramped in rented premises. If the local gentlemen and the Education Department pay a little attention to this question, I have no doubt shortly the Ganapathi National School will be housed in a building of its own.

**A. SHANMUGHAM.**

## " எங்கள் மானேஜர் !"

:o:

ஸ்ரீ கணபதி தேசிய உயர்தர ஆரம்ப பள்ளியில் தொண்டாற்றும் தலைமையாசிரியரும் ஏனைய ஆசிரிய ஆசிரியைகளும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் எங்கள் பள்ளியின் மானேஜரைப் பற்றிப் பொதுமக்களுக்குச் சிலவார்த்தைகள் கூற விரும்புகிறோம்.

எங்கள் பள்ளியின் நிர்வாகி திரு G. R. முருகேசன் அவர்கள் இப்பள்ளியின் ஸ்தாபகரது மூத்தகுமாரர். ஒரு குலத்தில் மறைவல்லான் ஒருவனிருந்தால் அவனுக்குப்பிறபட்ட மூன்று தலைமுறைகள் மறைவல்லுனராகவே பெரியோர்களாற் கருதப்படுவர். அஃதே போன்று ஓர் நல்லாசிரியரது குமாரரான எங்கள் பள்ளியின் மானேஜர் கருவிலே திருவுடையவராய் பெருமை வாய்ந்த தந்தைக்கேற்ற திறமைவாய்ந்த மகனாய், எளிய ஆசிரியர்களான எங்களது நிலையை உள்ளவாறறிந்து லோகல் போர்டுகளால் நடத்தப்படும் பள்ளிகளைப்போலவே எங்கள் சம்பளங்களை நிர்ணயித்து வருடா வருடம் சம்பள உயர்வும் கொடுப்பதோடன்றி எங்களுக்குப் பண நெருக்கடி ஏற்படும் சமயங்களில் எங்கள் சம்பளத்திலிருந்து முன்பணமாக (Advance) கொடுத்து அதை நாங்கள் பல சிறுதவணைகளில் திருப்பிக் கொடுக்கவும் அனுமதித்துள்ளார். ஆகவே நாங்கள் அன்னார்க்கு என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். "மற்ற பள்ளிகளைப்போலின்றி, மாணவர்க்கு உயர்தரமான பாடபுத்தகங்களை நாங்கள் தேர்ந்தெடுத்து அவற்றைக் கொண்டு பாட போதனை செய்யும் உரிமையை எங்களுக்கு அளித்துள்ளார். எங்கள் பள்ளியில் புகுந்த எந்த ஆசிரிய ஆசிரியையும் அவராகத்தன் உயர்வு கருதி பள்ளியை விட்டு நீங்க அன்னார் எப்போதும் குறுக்கே நின்றதில்லை. பல வருடங்களில் தேவைக்கு மேற்பட்ட ஆசிரியர்களிருந்தும் அவர்களை வேலையிலிருந்து நீக்காது அவர்கள் சார்பில் சர்க்கார் திரவ்ய சகாயம் இல்லாத போதும் அவர்களை வேலையினின்று நீக்காமை எங்கும் காணமுடியாத பெருந்தகைமையேயாகும்.

போதனாமுறை பயின்ற எங்களை மிஞ்சிய அவரது பொறுமையையும் இன்சொலுடைமையையும் மலர் முகத்தையும் காணும்போது நல்லாசிரியனாவது பிறவிக்குணமேயன்றி பயிற்சியால் அல்ல என்று நினைக்கத்தான் செய்கின்றது. எங்கள் பள்ளி ஸ்தாபகரது அரும் பெரும் தியாகத்தால் தான் இப்பள்ளி கால்கொள்ள முடிந்தது. அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி பள்ளியின் நலனென்றே கருதி "இவன் தந்தை என்நோற்றான் கொல்" என்ற சொல்லுக்கு இலக்கணமாய் விளங்கும் எங்கள் மானேஜர் திரு. G R. முருகேசன் அரோக திடகாத்திரராயிருந்து பள்ளியின் நிலையையும் எங்கள் நிலையையும் மேன்மேலும் உயர்த்த எல்லாம் வல்ல இறைவனருள் புரிவாராக."



நிர்வாகியுடன் ஆசிரியக்குழு.

**ஸ்தாபகர்:**

திரு. G. இரத்தினம் பிள்ளை B. A., L. T.

**மானேஜர்:**

திரு. G. R முருகேசன்.

| | | |
|---|---|---|
| **தலைமை ஆசிரியர்:** | | நியமனத் தேதி |
| திரு. S. இராகவாச்சாரியார். | .... | 18—7—32 |
| **உதவி ஆசிரியர்கள்:** | | |
| திரு. M. சியாளம். | .... | 22—3—37 |
| ,, R. சௌரிராஜன். | .... | 30—3—53 |
| ,, S. K. நடராஜன். | .... | 20—7—42 |
| ஸ்ரீமதி. V. அபிஷேகமேரி. | ... | 23—3—37 |
| குமாரி. S. V. மீனாட்சி. | .... | 25—6—52 |
| ,, லீலா ஜோசப் | .... | 7—8—52 |
| ,, J. மேரி ஜோசபின். | .... | 23—8—43 |
| ,, K. ராஜம். | ... | 7—7—52 |
| ஸ்ரீமதி. V. சுந்தரி. | ... | 16—7—45 |
| ,, S சம்பகலக்ஷ்மி. | ... | 19-11—53 |
| திரு. M. தங்கவேலு (கைவேலை ஆசிரியர்). | ... | 1-10—44 |

# கணபதி தேசீய உயர்தர ஆரம்ப பாடசாலை,

## சைதாப்பேட்டை.

## இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழா அறிக்கை.

அன்பின் பகுதியில் ஆர்வமுற்று அழைப்பிற்கிணங்கி இவணுற்ற உங்கள் அனைவர்க்கும் இப்பள்ளி தனது இருபத்தைந்தாவது ஆண்டைத் தாண்டும் இன்று அதன் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஒருவாறு விளக்க விழைகின்றேன்.

தோற்றம்:— இந்நகர்ப் பெருமக்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க சென்னை பிரொக்ரஸிவ் யூனியன் பள்ளி, கோவிந்தப்ப நாயகர் ஸெகண்டரி பள்ளி இவைகளின் தலைமையாசிரியர் பதவியைத் திறம்பட வகித்து, தாம் வெளியிட்டு உதவிய பல ஈடுமெடுப்புமற்றபள்ளி நூல்கள் வாயிலாக புகழுடம்பெய்திய ஸ்ரீ G. ரத்தினம் பிள்ளை, பி. ஏ. எல். டி. அவர்கள் 1929-ம் ஆண்டில் நிறுவி, 1932-ஆம் ஆண்டுவரை மூன்று வருடகாலம் ஸர்க்கார் திரவிய சகாயம் இல்லாத போதும் பொருட்படுத்தாது நடத்தி வந்தார்கள். ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு எல்லைக்கல்லான இந்த இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவில் தன்னலங்கருதாத அன்னாரது நினைவைப் போற்றுவோமாக.

வளர்ச்சி:— 1932-ஆல் ஸ்தாபகரின் மறைவுக்குப்பின்பு அவர் குமாரர்களின் கார்டியன் திரு. M. சோமசுந்தரம் பி. ஏ. அவர்களின் நிர்வாகத்தின் கீழ் பள்ளி செவ்வனே வளர்ந்தது. பின்னர், ஸ்தாபகரின் குமாரர் G. R. முருகேசன் அவர்களின் நிர்வாகத்திலும் பராமரிப்பிலும் தற்போது பள்ளி வளர்ந்து வருகிறது. சுமார் 45-மாணவருடன் துவங்கிய இப்பள்ளியில் தற்போது 283 மாணவ மாணவியர் கல்வி கற்று வருகிறார்கள்.

பள்ளியும் ஆசிரியர்களும்:— இப்பள்ளி எட்டு வகுப்புகளையும், பத்து பிரிவுகளையும், பன்னிரண்டு ஆசிரிய ஆசிரியைகளையும் உடையது. அவர்களுள் ஒருவர் மாவேலையில் தேர்ச்சி (Advance Diploma) பெற்றதுடன், சித்திரம் வரைவதிலும் ஹையர்கிரேட் சர்டிபிகேட் பெற்றவர். இருவர் நூல் நூற்றலில் சர்டிபிகேட் பெற்றவர். ஒருவர் முதற் சிகிச்சையிலும்

குடிமைப் பயிற்சியிலும் பயின்று சர்டிபிகேட் பெற்றவர். மூவர் Y.M.C.A. கல்லூரியில் பிரத்தியேக சனிக்கிழமை வகுப்புகளில் பயிற்சி பெற்று அதற்கான அத்தாட்சியுடையவர்கள். ஒருவர் காந்தியடிகள் ஆதாரக் கல்வி முறையில (Senior Basic Trained) பயின்றவர். இருவர் முதியோர் கல்விப் போதனை முறையில் பயின்று அதற்கான நற்சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். இதில் தற்போது 163-ஆண்களும் 120-பெண்களும் ஆக 283 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இவ்வாண்டில் எட்டாம் வகுப்பிற்காக அரசியலார் பரீட்சைக்கு இப்பள்ளியிலிருந்து 18-மாணவ மாணவிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

வசதிகள் :— இப்பள்ளியில் விஞ்ஞான படங்களை விளக்க விஞ்ஞானசாலையும், உபகரணங்களை விளக்க சிறுவர் நூல் நிலையமும் (Children's Library), ஆசிரியர்கட்கென ஒரு விளக்க நூல் நிலையமும் (Reference Library) உள்ளன. பாலர்களின் பலசிறப்பட்ட ஆற்றல்களைக் கண்டுபிடித்து, அவர்கட்கு எவ்வெத்துறையில் விசேடப் பயிற்சி அளிக்க முடியுமோ அந்தந்தத் துறைகளிலெல்லாம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண்களுக்கான ஆடல், பாடல், கும்மி, கோலாட்டம் முதலியவற்றிலும் மிகத்தேர்ந்த ஆசிரியைகளைக் கொண்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனிறுதியில் இணைக்கப்பட்டுள்ள பல கல்வியதிகாரிகளின் குறிப்புகள் இவற்றிற்குப் போதிய சான்றாகும்.

விளையாட்டுகள் :— இப்பள்ளிக்கெனச் உரிய ஓர் இடம் இல்லாவிடினும் விளையாட்டுகளிலும் பிள்ளைகட்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு பலபள்ளிகளிடையே அவ்வப்போது நடைபெறும் போட்டிப்பந்தய விளையாட்டுகளில் பன்முறை இப்பள்ளி 'ஷீல்டுகள்' (Shields), வெள்ளிக் கோப்பைகள் (Cups) முதலியவைகள் பெற்றிருப்பதே போதிய சான்றாகும். உபகார மனப்பான்மையும், சகோதர உணர்ச்சியும் மாணவரிடையே பெருக சிறுவர் செஞ்சிலுவைச் சங்கமும் சாரணர் இயக்கமும் நற்றொண்டாற்றி வருகின்றன. இவற்றின் பொதுக் காரியதரிசி திரு. M. சீயாளம்.

சொற்றிறம்:— மாணவர் தம் சொற்றிறனைப் பெருக்க பள்ளியின் மாணவர் தமிழ் மொழி வளர்ச்சிக் கழக ஆதரவில் வாரந்தோறும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இத்துறையில் மாணவர்கட்கு ஊக்கமூட்ட ஆண்டுதோறும் திடீர்ச் சொற்பொழிவுப் போட்டி நடத்தி, முதற்கண் நிற்பவர்க்கு வெள்ளிப் பதக்கமும், மற்றுமிருவர்க்கு சிறப்பு பரிசுகளும்

வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் ஷை கழக ஆதரவில் இருபது கூட்டங்கள் நடந்துள்ளன. பள்ளி ஆசிரியர்களைத்தவிர வெளியிலிருந்தும் பல அறிஞர்கள் — சிவாஜி ஆசிரியர் உயர்திரு திருலோகசீதாராம், தோழர் M. கன்னியப்பன், M. C., புலவர் முருகவேள், B. O L., தமிழ் வித்வான் தேவராஜனார், அமுதசுரபி ஆசிரியர் திரு. சு. வேம்பு ஆகியோர் அவ்வப் போது கூட்டங்களில் தலைமை தாங்கியுள்ளனர். ஷை கழகத்தின் வருடாந்திர விழா, சைதை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் ஸ்ரீ K. V. இராமஸ்வாமி ஐயர் B. A., L. T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இச்சமயத்தில் மேற்படியார்களுக்கு நன்றி செலுத்துவது நமது கடமையாகும். இவ்வாண்டின் கழக கௌரவ காரிய தரிசி:- குமாரி லீலா ஜோசப். மாணவ காரியதரிசிகள்:- S. சச்சிதாநந்தம், எட்டாம் வகுப்பு, K. S. சகுந்தலா, எட்டாம் வகுப்பு.

1. ஆங்கிலம் ஒப்பித்தல் —
திரு. K. V. இராமஸ்வாமி ஐயர், B. A., L. T.,
(சைதாப்பேட்டை நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி,
தலைமை ஆசிரியர்,
சுமார் 40 மாணவிகள் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.
2. தமிழ் திடீர் சொற்பொழிவு, } ஷை உயர்நிலைப் பள்ளித் தமிழ் வித்வான்
3. திருக்குறள் ஒப்பித்தல், } ந. ரா. தேவராசனார் அவர்கள்.
4. பாரதிபாடல் போட்டி — 1. சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகச் செயலாளர் ஸ்ரீ இரா. சுரா.
2. இராமபத்திரன் B. Com.
3. வெங்கடரத்தினம், B. A. (Hons.)
இப்போட்டியில் நாற்பதுக்கு மேற்பட்டவர் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.
5. சங்கீதப் போட்டி, } சைதாப்பேட்டை வெங்கடரமணி சங்கீத
6. அபிநயப் போட்டி, } வித்யாலயத் தலைவர் சங்கீத வித்வான் மதுரை மணி சிஷ்யர் சேதுராமன் அவர்கள்.

உல்லாசப் பிரயாணம்:— உல்லாசப் பிரயாணம் மாணவ ஆசிரியர்களின் உள்ளங்களிலே உற்சாகமூட்டுவதாகும். இதன் உயர்வை அறிந்து அடிக்கடி மாணவ மாணவிகளுடனும் ஆசிரிய ஆசிரியைகளுடனும் உல்லாசப் பிரயாணங்கள் தக்க இடங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவ்வாண்டில் மாணவ மாணவிகள் அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சி சாலை, சென்னை மியூசியம், சின்னமலை, திருநீர் மலை, குரோம்பேட்டை தோல்பதனிடும் சாலை முதலியவற்றைக் கண்டு களித்தனர். பொதுக் காரியதரிசிகள் திரு. M. சியாளம், திரு. M. தங்கவேலு, குமாரி மேரிஜோஸபின்.

நடிப்பு :— இயல், இசை, நாடகம் மூன்றும் கலந்த மிகச்சிறந்த இந்நடிப்புக்கலையில் குழந்தைகட்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு கடந்த ஆண்டுகளில் இப்பள்ளியில் நடத்திக் காட்டிய 'திருநீலகண்டர்' "மங்கையர்க்கரசி" "சுபத்ரா–அர்ஜுனு" போன்ற நாடகங்கள் போதிய அத்தாட்சிகளாகும். அதன் கனிந்த விளைவை இன்று நடக்கவிருக்கும் "பாமா விஜயம்" இளங்கோ நாடகம், ஆங்கில மஹாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய "வெனிஸ் வர்த்தகனில் நீதிமன்றக்காட்சி" "முட்டாள் வண்ணான் காமிக்" மற்றும் பல கதம்ப நிகழ்ச்சிகளிலிருந்து நீங்களே அறியக் கூடுமாதலால் அதைப்பற்றிக் கூறிக்காலந் தாழ்த்த விரும்பவில்லை.

இப்பள்ளிக்குள்ளத் தனிப்பெரும் வாய்ப்பு :— இப்பள்ளியில் நடக்கும் இந்நகர் பாரதி கலைக்கழகத்தாரது இலக்கிய வகுப்புகளிலும், மாணவர்கள் நல்ல பயனடைகின்றனர். பாரதியாரது "பாஞ்சாலி சபத" இலக்கிய வகுப்பு தொடர்ந்து நடைபெற்று அதன் முடிவில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்ட அனைவரும் பரிசு பெற்றதோடன்றி மூவர் சிறப்புப் பரிசுகளும் பெற்றனர்.

போட்டிகளில் பங்கு கொள்வது :— தனிப்பட்ட நபர்களாலோ, பள்ளிகளாலோ, கழகங்களாலோ, நடத்தப்பெறும் எந்தப் போட்டிகளுக்கும் தைரியமாய் போட்டியிட இப்பள்ளி தயங்குவதே இல்லை. தியாகராயநகர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளியில் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு சென்னையிலுள்ள பல்வேறு பள்ளிகளிடையே நடைபெற்ற போட்டிகளில் இப்பள்ளியும் பங்கு கொண்டு ஐந்தாம் வகுப்பு வரையுள்ள போட்டிகளில் இப்பள்ளியின் ஐந்தாம் வகுப்பு மாணவன் K. நாராயண ராஜுக்கு இரண்டாம் பரிசும், எட்டாம் வகுப்பு முடிய உள்ள போட்டிகளில் தமிழில் நடந்த சொற் போட்டியில் இப்பள்ளியின் ஏழாம் வகுப்பு மாணவி R. வசந்தாவுக்கு முதற்பரிசும், ஷை வகுப்பு மாணவி R. மங்களத்திற்கு ஆங்கில சொற்போட்டியில் இரண்டாம் பரிசும் கிடைத்தன என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறேன். மேலும் இந்நகர் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக்கழகத்திலும் இப்பள்ளி மாணவர் பயின்று நான்காம் வகுப்பு T. இராமலிங்கம் என்பவரும், மூன்றும் வகுப்பு S. இளங்கோ என்பவரும் பரிசுகள் பெற்றுள்ளனர். பாரதியார் பிறந்த தினத்தை யொட்டி பெரம்பூரில் சென்ற ஆண்டில் நடைபெற்ற பாரதிமகாநாட்டிலும் பாரதி பாடல் போட்டியிலும் சிறுவர் பகுதிக்கான முதற்

பரிசாக வழங்கப்பட்ட பதக்கத்தை இப்பள்ளி மாணவியே பெற்றார் என்பதையும் இவ்வாண்டிலும் R. இந்திரா இரண்டாம் வகுப்புப் பெண் சிறப்புப் பரிசு பெற்றார் என்பதையும் பெருமிதத்துடன் கூறுகிறோம்.

விருதுநகர், மாணவர் கலா நிலையத்தார் சென்ற ஆண்டில் நிகழ்த்திய எட்டாம் வகுப்புக்கான தேர்வு ஒன்றில் இப்பள்ளியில் சிலரே கலந்து கொண்ட போதிலும் இப்பள்ளி மாணவி செல்வி ஜானகி இராஜதானி முழுவதிலும் நான்காவதாக நின்று பரிசு பெற்றார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தவிரவும் பல்லாண்டுகளாக சென்னையில் நடைபெற்று வரும் "பைஸானி மாதவசெட்டி' திவ்ய பிரபந்தப் பண்ணிசைப் போட்டியில் சென்ற வருடம் முதல் இப்பள்ளி பங்கு கொண்டு வருகிறது. இப்பள்ளி ஆசிரியைகளான குமாரி K. ராஜம், ஸ்ரீமதி V சுந்தரி ஆகிய இருவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு சென்ற ஆண்டில் நால்வரும், இவ்வாண்டில் பதின்மரும் பரிசு பெற்று வந்தனரென்பதைக் கூற ஆசைப் படுகிறேன். கடவுள் பக்தி அருகி வரும் இந்நாளில் இளம்பயிர்களிடம் கடவுள் பக்தியை ஊட்ட வெள்ளிக்கிழமைகளில் பூஜையும், தினந்தோறும் கடவுள் வணக்கமும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. தவிரவும் "ஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடாதிபதி" சங்கராச்சாரியாரால் நடத்தப்பெறும் திருப்பாவை, திருவெம்பாவை மகாநாடுகளிலும் இப்பள்ளி மாணவ மாணவிகள் இவ்வாண்டில் முதன் முதலாக பங்கு கொண்டு 21-பேர் வெள்ளிக்காசுகளும், நால்வர் தங்கக்காசுகளும் பரிசு பெற்றதுடன் ஆசாரிய ஸ்வாமிகளின் ஆசியையும் பெற்றனர்.

பெற்றோர் ஒத்துழைப்பு:— இது தான் எம் பள்ளியின் முன்னேற்றத்திற்கு ஜீவநாடி. அதை உணர்ந்த நாங்கள் கடமை காரணமாக அவ்வப்போது மாணவரின் தேர்ச்சியை அறிவிப்பதுடன் (Progress Report) நில்லாது பெற்றோர்களை அடிக்கடி சந்தித்துக் குழந்தைகளின் அபிவிருத்திக்கான வழிகளைக் கூறி வருகிறோம். எல்லோரையும் ஏககாலத்தில் சந்திக்க இத்தகைய விழாக்களையும் நடத்துகிறோம். குழந்தைகளின் பல வகைப்பட்ட திறன்களையும் வளர்க்க ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தித் தக்கோரைப் பாராட்டும் வகையில் பரிசுகள் வழங்குகிறோம். இவ்வாண்டில் எங்களது பள்ளியில் நடைபெற்ற பல போட்டிகளிலும் நீதிபதிகளாக இருந்து "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல" நீதி வழங்கி உதவிய கீழ்கண்ட பெரியார் அனைவருக்கும் எமது நன்றி.

1. விளையாட்டுப் பந்தயங்கள்:— Y. M. C. A. கல்லூரி ஆசிரியர்,
திரு. தாமஸ் அவர்கள்,

2. ஆங்கிலச் செய்யுள் ஒப்பித்தல்:—
3. தமிழ் திடீர்ச் சொற்பொழிவுகள்:—
4. திருக்குறள் ஒப்பித்தல்:—
5. பாரதி பாடல் போட்டி:— பாரதி கலைக்கழக செயலாளர், திரு. சுராஜ் அவர்கள்.
6. சங்கீதப் போட்டி:—
7. அபிநயப் போட்டி:—

இதர பள்ளிகளுடன் கூட்டுறவு:— சகோதரப் பள்ளிகளில் நடைபெறும் இத்தகைய விழாக்கட்கு இப்பள்ளி ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொண்டு இப்பள்ளியின் முன்னேற்றத்துக்கு அவ்வனுபவத்தைப் பயன் படுத்திக் கொள்ளுகின்றனர்.

குறைகள்:— இப்பள்ளிக்கென சொந்தமான ஓர் கட்டடம் இல்லாமையே இதன் வளர்ச்சிக்குப் பெருந் தடையாக இருப்பது. அக்குறை மனம் விரிந்த இந்நகர்ப் பெருமக்கள் உதவியாலும், அரசாங்கத்தின் ஆதரவாலும் நீங்குமென்று நம்புகிறோம்.

ஆசிரியர் திருப்தியே நோக்கமாகக் கொண்டு ஆசிரியரல்லாத மானேஜரால் நடத்தப்பெறும் இப்பள்ளியில் தொண்டாற்றும் ஆசிரியர் கட்கு லோகல் போர்டு ஸ்கேலின்படி (Local Board Scale) ஊதியம் அளிக்கப்படுவதோடன்றி அவ்வப்போது சம்பள உயர்வும் கொடுக்கப்படுகிறது. அவர்களது திருப்திக்கு இதன் 11-ஆம் பக்கத்தில் ஆசிரியர்களின் பெயர்கட்கு எதிரில் கொடுக்கப்பட்டுள்ள நியமனத் தேதியே போதிய சான்று பகரும். பள்ளியில் பயிலும் பொருளாதார வசதியற்ற மாணவ மாணவிகட்கு ஆண்டு தோறும் உபகாரச் சம்பளமும் மானேஜ்மெண்டால் வழங்கப்படுகிறது.

இவ்விழாவிற்கு இடையறுதுழைத்த இப்பள்ளியின் ஆசிரிய ஆசிரியைகட்கும், சிறப்பாக பொதுக்காரியதரிசி திரு. M. சியாளம், பெண்களைப் பயிற்றுவித்த குமாரி K. ராஜம், திருமதி V. சுந்தரி, குமாரி மேரி ஜோஸபின் ஆகியோர்க்கும், ஆங்கிலப் பகுதியைச் சிறப்பித்த குமாரி S. V. மீனாட்சி, குமாரி லீலா ஜோசப் ஆகியோர்க்கும், செய்யுட் பாடங்களை ஒப்பித்தலிலும் நாடக நிகழ்ச்சிகளில் பயிற்றுவித்த திரு M. சியாளம், திரு R. சௌரிராஜன், திரு M. தங்கவேலு ஆகியோர்க்கும் மானேஜ்மெண்டாரது அன்பு கலந்த நன்றியும் பாராட்டும் உரியதாகுக. தங்கள்

குழந்தைகளை இப்பள்ளியில் நடைபெறும் பல பயிற்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ள அனுமதித்தப் பெற்றோர் அனைவருக்கும், தாமாகவே முன் வந்து பரிசில்களும் நன்கொடையும் வழங்கிய பெரியோர்கட்கும் எம் நன்றி உரியதாகும். இறுதியாக இவ்விழா இவ்விடத்தில் இனிது நடைபெற இடமளித்துதவியவர்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம். பலனைமட்டுமே கருதாத கடமை உணர்ச்சி கொண்ட ஆசிரியர்கள், பண்புடைய மாணவர்கள், நம்பிக்கையும் அன்புமுடைய பெற்றோர்கள், பள்ளி வளர்ச்சியே குறிக்கோளாய்க் கொண்ட நிர்வாகம் இவற்றுடன் இருபத்தைந்து ஆண்டுகளைத்தாண்டி வெள்ளிவிழாக் கொண்டாடுமாறு திருவருள் புரிந்த இறைவன் பேரருள் திறனை எண்ணி வணங்கி விடை பெறுகிறேன்.

குழந்தைகளுக்காக குழந்தைகளுடன் வாழ்வோம்!

G. R. முருகேசன்.
மானேஜர்.

CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956
MADRAS

**மாணிக்கம் ஸ்டோர்**

19-B, ஜோன்ஸ் ரோட்,

சைதாப்பேட்டை.

அரிசி, எண்ணெய், முதலிய மளிகை சாமான்கள், பொட்டு, பிண்ணாக்கு, நாடா, குழல், சோப்பு, நோட்டுப் முதலியவைகள் குறைந்த விலையில் கிடைக்கும்..

தயவு செய்து ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

## "Extracts from Inspection Reports."

25— 8—'33 "The School is in a satisfactory condition."

(Sd.) P. RAGHAVACHARI,
D. E. O.

9—10—'33 "The School serves the need of the poorer middle classes."

(Sd.) V. CHELLAM IYENGAR,
D. I. OF SCHOOLS.

13—10—'36 "Girls did well in Kolattam, Kummi and Dance. On the whole, the School attempts to do more than average work."

(Sd.) T. SIVASAILAM PILLAI,
D. I. OF SCHOOLS SAIDAPET

19— 8—'37 "The School had a strength of 43 in 1931 and I am glad to note that within six years the strength has increased to 200 and that a large number of girls attend the School. There are a few Harijan pupils in the School."

(Sd.) G. L. LOBO,
D. I. OF SCHOOLS, S. MADRAS.

22— 7—'37 "I am very generally satisfied with the organization and discipline of the School. The teaching is on the whole well done. Card Board work is well done."

(Sd.) GULAM DASTAGIR
D. E. O. CHINGLEPUT DT.

9— 9—'37 "The School seems to run on well organized lines. Girls are instructed in special subjects for girls."

(Sd.) HOBDAY,
S. A. I. MADRAS.

21— 4—'38 "All the teachers evince much interest in the latest methods of teaching. The Headmaster is to be congratulated for keeping the School in such a high level of efficiency."

(Sd.) K. KRISHNAMACHARI,
D I OF SCHOOLS, SAIDAPET.

20— 2—'41 "The School continues to do very satisfactory work."

(Sd ) V. RAMACHANDRA IYER,
D. I. OF SCHOOLS, SAIDAPET.

"The Headmaster does earnest and sincere work with the active co-operation of a continuous staff of teachers who do regular work."

(Sd.) A. VENKATASUBRAMANYA IYER,
J. D I OF SCHOOLS, SAIDAPET.

24—11—'51 "The Headmaster, Sri S Raghavachari deserves to be congratulated for running the school at this level in spite of handicaps."

A. VILVA RAI;
D I OF SCHOOLS. EGMORE RANGE

8—12—'53 "The general condition of the School is satisfactory."

(Sd.) P S. DAVID JOSEPH,
D I. OF SCHOOLS. PERUMBUR RANGE,

## Important Activities of the School :-

17—10—'31 The Educational Exhibition was opened by Mr. Sadasiva Reddiar, the Deputy Director of Public Instruction, Madras.

5— 5—'36 **Seventh Anniversary** was celebrated when Mr. K. Ramalinga Mudaliar, Commissioner of Saidapet Municipality presided. 'Judgment Scene' from "The Merchant of Venice" enacted by the pupils was worthy of special mention.

19— 4—'37 **Eighth Anniversary** was celebrated with Sri S. R. Ramalingam Pillai, Municipal Chairman in the chair. A drama entitled "MANGAYARK-K-RASI" was staged by the girl pupils of the school.

22— 3—'39 **The Parents' Day** was celebrated with Sri K. Venkataswamy Naidu, Mayor of Madras in the chair. Dr. P. Varadarajulu Naidu delivered a lecture on "Parental Co-operation."

26— 3—'39 **The Tenth Anniversary** was celebrated under the Presidentship of Sri Sivasailam Pillai, M.A., L.T., The D. I. of Schools, Saidapet. The girls put on board "THE BAKTHA KUCHELA" which was very much appreciated.

8— 5—'53 **The Twenty Fourth Anniversary** was celebrated. Sri P. S. David Joseph, Deputy Inspector of Schools, Perambur Range presided.

——:(o):——

# பாத்திரக்கடை.

உங்கள் வீட்டுக்கு அன்ருட உபயோகத்திற்கும், கலியாண விசேஷங்களுக்கும், பித்தளை, செப்பு பாத்தி ரங்கள் குறைந்த விலையில் சில்லரையாகவும், மொத்த மாகவும் விற்கப்படும்.

நீங்களும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்
நாணயமான இடம்

## எம் எஸ் எம் & சன்ஸ்,

பாத்திர வியாபாரம்,
நெ. 8, பஜார் ரோட், சைதாப்பேட்டை,
மதருஸ் 15.

CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956
MADRAS

## R. ஷண்முகம் முதலியார்

## மகிளப்

No. 1, வரசித்திவிநாயகர் கோவில் தெரு,
சைதாப்பேட்டை, மதருஸ்-15

சுத்தமான பலகாரங்களும் திடமான தேயிலையில்
தயாரித்த தேநீரும் விலை சரசமாகக்
கிடைக்கும்

புரொப்ரைட்டர்:
**R. ஷண்முகம் முதலியார்**

**ASSOCIATION PUBLISHING HOUSE**

"ARAMBA KALVI OFFICE"

*94/95, New Street, Mannady P. O. Madras-1*

POST BOX No. 1818

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Elementary Schools)

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்.

(Vidwan V. Subramaniam).

| | புத்தகத்தின் விலை. | கெஜட் பக்கம். | அங்கீகாரமான தேதி. |
|---|---|---|---|
| முதல்வகுப்பு | 0— 4—0 | 3 | 13—1—'54 |
| இரண்டாம் வகுப்பு | 0— 5—0 | 3 | do |
| மூன்றும் வகுப்பு | 0— 8—0 | 3 | do |
| நான்காம் வகுப்பு | 0— 9—0 | 3 | do |
| ஐந்தாம் வகுப்பு | 0—10—0 | 3 | do |
| ஆறும் வகுப்பு | 0—12—0 | 26 | 13—5—'53 |
| ஏழாம் வகுப்பு | 0—14—0 | R.C.No. 3/54 | 17—3—'54 |

### புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Sesbadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1— 2—0 | 2 | 13—1—'54 |
| ஏழாம் வகுப்பு | 1— 4—0 | 2 | do |
| எட்டாம் வகுப்பு | 1— 4—0 | 2 | do |

### சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1— 1—0 | R.C No. 3/54 | 17—3—'54 |
| ஏழாம் வகுப்பு | 1— 8—0 | ,, | ,, |
| எட்டாம் வகுப்பு | 1— 8—0 | ,, | ,, |

### அனுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0—12—0 | 21 | 13—5—'53 |
| ஏழாம் வகுப்பு | 0—12—0 | 21 | ,, |
| எட்டாம் வகுப்பு | 0—12—0 | 21 | ,, |

# JAYAM & Co

## EDUCATIONAL PUBLISHERS

NUNGAMBAKKAM, MADRAS 6.

| | | | |
|---|---|---|---|
| 1. Vasantha Vachakam | I to V | for Stds. | I– V |
| 2. Balar Suya Ganitham | | ,, | III– V |
| 3. Balar Boogolam | | ,, | III– V |
| 4. Nature Study | | ,, | III– V |
| 5. General Science | Book I–III | ,, | VI–VIII |
| 6. Social Studies | ,, I–III | ,, | VI–VIII |
| 7. Sulaba Ganitham | ,, I–III | ,, | VI–VIII |
| 8. Union Reader | ,, I & II | ,, | VI & VII |

*N. B:-* All the above books have been approved by The Madras Text Book Committee.

The Crossword Press, Chidambaram.